[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று நடைபெறுவதாக இருந்த அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் 30—3—1973-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்போது சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை மாண்புமிகு கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் ராஜமன்னார் கமிட்டியின் அறிக்கையை விவாதிக்க ஒரு நாள் ஒதுக்குவதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவன ஈர்ப்பு பிரச்னை முடியட்டும். அதற்குப் பிறகு நீங்கள் கேள்வியைக் கேட்கலாம்.

3. கவன ஈர்ப்பு.

மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்து

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I wish to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the closure of Annamalai University due to some clash between two groups of students. தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிக்கடி நடக்கக் கூடிய நடவடிக்கை. . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member may just read the notice. After the reply was given by the Hon. Minister, the hon. Member can ask for clarification.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6,000 ஆகும். அதில் 4,000 பேர்கள் கலை, அறிவியல் பிரிவைச் சேர்ந்தவர்கள்.